# பன்முக நோக்கில் பண்டைய இலக்கியங்கள்




பதிப்பாசிரியர்கள்

**முனைவர் ச. இராஜலதா**

**முனைவர் மா.இரா. வனிதாமணி**

# பன்முக நோக்கில் பண்டைய இலக்கியங்கள்

## ஆய்வுக் கோவை


பதிப்பாசிரியர்கள்

**முனைவர் ச. இராஜலதா**

**முனைவர் மா. இரா. வனிதாமணி**



**தமிழ்த்துறை**

ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642107

பொருளடக்கம்

11. வள்ளுவர் கூறும் அரசியல் அறமும் இன்றைய அரசியல் சூழலும்
பா. பொன்தேவி 107

12. சிலப்பதிகாரமும் - மூவேந்தர்களும்
முனைவர் அ. மகபூபு 112

13. கம்பராமாயணத்தில் ஜோதிடம்
முனைவர் க. மங்கையர்க்கரசி 122

14. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் மன உணர்வுகள்
மு. மேனகா 129

15. மகாபாரதத்தில் மேலாண்மை - ஐந்து முக்கியக் கூறுகள்
முனைவர் ஜீ. மனோகரன் 137

16. புறநானூற்றில் தமிழர் பண்பாடு
இரா. இராமதுரை 144

17. வேற்றுமை மயங்கியியல் கோட்பாடுகள்
கு. ரோஸ்லின் 156

18. பட்டினப்பாலை உணர்த்தும் கரிகாலனின் ஆளுமைத்திறன்
முனைவர் க. லெனின் 163

19. எட்டுத்தொகை அகஇலக்கியங்களில் உளவியல்
முனைவர் து. விசாலாட்சி 172

# 12. சிலப்பதிகாரமும் - மூவேந்தர்களும்

முனைவர் அ. மகபூப, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி - 642001.

## முன்னுரை

சிலப்பதிகாரம் தமிழ்க் காப்பியங்களுள் தலைசிறந்தது. மனித வாழ்வைச் சித்தரித்துக் கூறும் பேரிலக்கியம்; மனிதனுடைய நல்லியல்புகளையும், தீயஇயல்புகளையும் அதனால் ஏற்படும் விளைவுகளைத் தெளிவாகக்கூறும் காப்பியம். தமிழகத்தின் ஐவகை நிலங்களையும் அவற்றின் இயல்புகளையும் முதலில் விரித்துக் கூறுயது. மொழிப்பற்று, இனப்பற்ற, நாட்டுப்பற்று என்பவற்றை உயிர் நாடியாகக் கொண்ட காப்பியம். விருப்பு, வெறுப்பு இன்றிச் சேர, சோழ, பாண்டியர் மூவரையும் ஒன்று போலவே பாராட்டுவது. சமயப் பொறையுடையது. இத்தகைய பண்புகளோடு விழுமிய சொற்களால் ஆக்கப்பெற்ற அகவற் பாக்களையும் வெண்பாக்களையும் தன்னகத்தே பெற்றிருப்பது. உள்ளத்திற்குச் சிறந்த அறிவுரையை இறுதியில் அளித்து நிற்பது. இத்தகைய உயர்ந்தப் பண்புகளால் சிலப்பதிகாரம் என்னும் காவியம் தலைசிறந்தக் காப்பிய நூலாய்க் காட்சியளிக்கிறது. இக்காப்பியத்தில் உள்ள மூவேந்தர்களின் சிறப்பினை கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## மூன்று தமிழ் நாடுகள்

சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்பவை தொன்றுதொட்டு இருந்துவரும் மூன்று நாடுகளாகும். இவற்றுள் சேரநாடு என்பது, இன்றைய கொச்சி- திருவாங்கூர் நாடுகளுடன் மலையாள மாவட்டமும் சேர்ந்த நிலப் பகுதியாகும். சோழநாடு என்பது, சிதம்பரத்திற்கு வடக்கே-யுள்ள வெள்ளாற்றை எல்லையாகவும் புதுக்கோட்டைக்கு அருகேயுள்ள தென்வெளாற்றைத் தெற்கெல்லையாகவும் கொண்டுள்ள நிலப்பகுதியாகும். அதாவது, இன்றைய

தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களிலும் தென்ஆற்காடு மாவட்டத்தின் தென்பகுதியிலும் உள்ள நிலப்பகுதியாகும். பாண்டியநாடு என்பது இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம். திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்டது. சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்களின் சிறப்பினை சிலப்பதிகாரத்தின் பெரும்பிரிவுகளான காண்டங்கள் மூன்றிலும் விரிவாக எடுதுரைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய வீரம், கொடை, அறம் தவறாத நடத்தை போன்றவற்றை இந்நூல் முழுவதிலும் விளக்கப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாகத் தமிழர்களின் பெருமையை அறிந்துகொள்ளமுடிகிறது.

சோழர்

சிலப்பதிகாரக் காப்பியத்தின் துவக்கமாக மங்கல வாழ்த்தில் முதலில் “திங்களைப் போற்றுதும்” என்று தொடங்கும் பாடல்கள் நான்கிலே முதன் மூன்று பாடல்கள் சோழர் பெருமையைக் கூறுகின்றன. இவைகள் சோழர்களின் செங்கோன்மையை விளக்குகின்றன.

கரிகாற்சோழன்

சோழர்களில் சிறந்தவன் மன்னன் கரிகால் வளவன். கரிகாற்சோழன் போர்புரிவதிலே பேராசையுள்ளவன், தமிழக எல்லையுள் அவனை எதிர்ப்போர் யாரும் இல்லை. தன்னிகர் இல்லாத வீரனாக விளங்கினான். வடதிசை பெருந்திசையாதலால், அங்கே பகைவரைப் பெறலாம் என்று கருதினான். நல்ல நாளிலே, வாள், குடை, முரசுகளை முன் செல்லவிட்டான்.'என் புயங்கள் பகைவர்களைப் பெறுக என்று வழிபடுத் தெய்வத்தை வணங்கினான். வடதிசை நோக்கிப் போர் முழக்கத்துடன் புறப்பட்டான். வடக்கே செல்லும்போது இமயமலை குறுக்கிட்டது. அதற்குமேல் போகமுடிய-வில்லை. மனஞ்சலித்துத் திரும்பினான். இமயமலை தனது செலவைத் (பயணம்) தடுத்ததற்காக அதன் மேல் சினங்கொண்டான், அம்மலையின்மேல் தனது புலி

முத்திரையைப் பொறித்து மீண்டான். திரும்பி வரும்போது, கடலையே தனது நாட்டுக்குக் காவலாகக்கொண்ட வச்சிரநாட்டு வேந்தன் கரிகாலனுக்குப் பணிந்தான்; அவனுடைய முத்துப் பத்தரைக் கப்பமாகக் கொடுத்தான். மகதநாட்டு மன்னன் வாட்போரிலே வல்லவன். அவன் கரிகாலனை எதிர்த்துப் போர் செய்தான்; தோல்வியடைந்தான். அவன் தன் பட்டிமண்டபத்தைத் திறையாகக் கொடுத்துப் பணித்தான். அவந்தி நாட்டு அரசன், கரிகாலனுடன் போர் செய்யவில்லை நண்பனாக நின்று வரவேற்றான். தனது நட்புக்கு அடையாளமாக வாயில் தோரணம் ஒன்றைக் கொடுத்தான். முத்துப்பந்தல், பட்டிமண்டபம், வாயில்தோரணம் இவைகள் எல்லாம் மயன் என்னும் தெய்வத் தச்சனால் ஆக்கப்பட்டவை.

இருநில மருங்கின் பொருநரைப் பெறாஅ

செருவெம் காதலின், தீருமா வளவன்

வாளும், குடையும், மயிர்க்கண் முரசும்

.....................................................

நிவந்துஓங்கு மரபின் தோரண வாயிலும் (இந்திர 59-104)

இவ்வடிகள் கரிகாலன் வரலாற்றைக் கூறின.

தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்

நீர்ப்படைக் காதையிலும், வாழ்த்துக் காதையிலும் தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன், சிபிச் சோழன் இவர்கள் வரலாறுகள் காணப்படுகின்றன. மூன்று மதில்கள் பொருந்திய ஒரு நகரம்; அது வானத்தில் அசைந்து செல்லும் தன்மையுள்ளது. அந்நகரில் அசுரர்கள் வாழ்ந்துவந்தனர். சோழ மன்னன், தேவர்கள் வியக்கும்படி அந்நகரை அழித்தான் அசுரர்களை வென்றான். இவன் பெயர் தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன். சிபிச் சோழன் கொடையிலே சிறந்தவன் அவன் தன்னைச் சரணடைந்த ஒரு புறாவின்

உயிரைப் பாதுகாத்தான். அதைத் தூரத்திவந்த பருந்துக்கு அப்புறாவின் எடையுள்ள தசையைத் தன் உடம்பிலிருந்து அரிந்து கொடுத்தான். இதன் மூலம் புகழ்பெற்றான். இந்தசெய்தியை சிலம்பு கூறுகையில்

வெயில் விளங்கு மீணிப்பூண விண்ணவர் வியப்ப

எயில்மூன்று எறிந்த இகல்வேல் கொற்றமும்,

குறுநடைப் புறவின் நெடுந்துயர் தீர,

………. அரிந்துஉடம்பு இட்டோன் அறந்தரு கோலும்

*(நீர்ப்படை164-168)*

என்பதின் மூலம் இரண்டு சோழர்கள் வரலாற்றையும் அறியமுடிந்தது. சிபியைக் குறிக்கும் செய்யுளில் குறையுஇல் உடம்பு அரிந்த கொற்றயன், முன்வந்த கறயை முறைசெய்த காவலன்" என்று குறிக்கப்பட்டுள்ளது. இது, சிபியும் பசுவுக்கு நீதி வழங்கிய சோழனும் ஒருவன்தான் என்னும் பொருள்படும்படி அமைந்திருக்கின்றது. "குறைவுகில் உடம்பு அரிதக கொற்றவன், குறவைக்கு நீதி வழங்கிய மரபிலே வந்தவன்" என்று பொருள் கொண்டாள்தான் இருவரும் வெவ்வேறு சோழர்கள் என்று கருதலாம். வழக்குரை காதையிலும் இச்சோழன் வரலாறு சொல்லப்படுகின்றது, பசுவுக்கு நீதி வழங்கிய சோழன் வாலாறும் சொல்லப்படுகின்றது. இங்கே புறவுக்கு அருளினோன் வேறு, ஆவுக்கு முறைசெய்தோன் வேறு என்றுதான் காணப்படுகின்றது.

புள்உறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்

வாயில் கடைமணி நடுநா நடுங்க

………. பெயர்ப் புகார் *(வழக்குரை-51-56)*

இவ்வடிகள் சிபியின் வரலாற்றையும், கறவைக்கு முறை செய்த சோழன் வரலாற்றையும் குறிந்தன. கறவைக்கு முறைசெய்த சோழனையே பிற்காலத்தார் மனுநீதி

கண்டசோழன் என்று பெயர் குறித்தனர். கரிகாய் சோழன், முசுகுந்தன், தூங்கெயில் எறிந் சோழன், சிபிச் சோழன், கறவைக்கு முறைசெய்த சோழன் ஆயேவர்களின் பெருமையைச் சிலப்பதிகாரம் பலவிடங்களில் பாராட்டிப் பேசுகின்றதை அறியமுடிகிறது.

பாண்டியர்

பாண்டியர்புகழும் பெருமையும் பலவிடங்களில் பாராட்டப்படுகின்றன. அவர்களுடைய ஆட்சிமுறையும் போற்றப்படுகின்றது. அந்திமாலை சிறப்புசெய் காதையிலே சந்திரோதயத்தைப் பற்றிக்கூறும் இடத்திலே பாண்டியர் குலப் பெருமையைக் காணலாம். பாண்டியன் வயதால் இளைஞனாயினும், பகைவேத்தரைப் போரிலே அழிக்கும் ஆற்றல் உள்ளவன். இத்தகைய தென்னர்குல முதல்வனே சந்திரன், அச்சந்திரன், அந்திநேரத்திலே செவ்வானத்திலே வெண்பிறையாகத் தோன்றினான். காதலரைக் கவலைக்குள்ளாக்கும் மாலைப்போழுதாகிய குறுநில வேந்தனைக் கடிந்தான். தழை அரசியலிலே தவறாமல் வெண்மையான கதிர்களைப் பரப்பினான்.

இளையர் ஆயினும் பகைஅரசு கடியும்

செருமாண் தென்னர் குலமுதல் ஆகலின்

.............................................................

பான்மையில் திரியாது பால்கதிர் பரப்பி"

இவ்வடிகள் பாண்டியர் பெருமையைப் பாடின, இவற்றால் அவர்கள் புகழை அறியலாம். பாண்டியன் அரசாளும் நாட்டிலே யாரும் துன்புறமாட்டார்கள்; எவருக்கும். யாரும் துன்பம் செய்யமாட்டார்கள், இயற்கையிலே ஒன்றோடு ஒன்று பகைமை பாராட்டும் உயிர்களும் பகையின்றி ஒன்றுபட்டு வாழும் என்று மற்றோர் இடத்தியே கூறப்படுகின்றது. கரடியும் புற்றுத் தோண்டாது, மான்கூட்டத்தைக் கண்டால் புலி பகைக்காது, பாம்பும், அச்சந் தரும் வேறு பிராணிகளும்,

இரைதேடும் முதலையும், இடியும் நம்மைச் சார்ந்தவர்களுக்குத் துன்பந் தரமாட்டாது. செங்கோல் தவறாமல் தென்னவர் காக்கும் நாடு இந்தகைய சிறப்புள்ளது.

கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா

வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலார

அரவும் சூரும், இரைதேர் முதலையும்

உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா:

செங்கோல் தென்னவர் காக்கும் நாடு" (புறஞ்சேரி -5-10)

இவ்வடிகளும் பாண்டிய மன்னர்களின் ஆட்சிப் பெருமையை விளக்கின. பாண்டியநெடுஞ்செழியன் தான் குற்றவாளி என்பதை உணர்ந்தவுடன் வருந்தி உயிர் துறந்தான. இது பாண்டியர் பெருமையையும் நீதிமுறையையும் உணர்த்துகிறது. செங்கோல் வளைய உயிர்வாழார் பாண்டியர் என்று வாழ்த்துக் காதையிலே பாராட்டப்படுகின்றது.

நிலம்தருதிருவில் பாண்டியன்

பாண்டியன் கடல் வற்றும்படி வேலாயுதத்தை விட்டெறிந்தான். அப்பகை காரணமாகக் கடல் கொதித்து எழுந்தது. பஃறுளி ஆறு, பல பக்கமலைகளையுடைய குமரிக்கோடு இவைகளுக்கிடையிலிருந்த நிலத்தை விழுங்கிற்று அதனால் அப்பாண்டியன் அப்பகுதியைவிட்டு வெளியேறினான். வடதிசையிலே கங்கையையும், இமயத்தையும் எல்லையாகக்கொண்டு தென்னகத்தை ஆண்டான். இவனை நிலம் தரு திருவில் பாண்டியன் என்பர். சந்திரகுலமாகிய பாண்டியர் பரம்பரை மேம்படும்படி இந்திரனுடைய வலிமை பொருந்திய ஆரத்தைத் தன் மார்பிலே அணிந்து விளங்கினான் மற்றொரு பாண்டியன், ஒரு பாண்டியன் இந்திரன் முடியில் உள்ள வளையத்தை உடைத்தான். அதனால் இந்திரன் ஆணைக்கு அடங்கிய மழை, பாண்டிய நாட்டிலே பெய்யவில்லை இதைக் கண்ட

பாண்டியன் சினங்கொண்டான். மேகங்களைப் பிடித்துச் சிறையிலிட்டான். அதன்பின் மழை பெய்தது நாடு செழித்தது. இவ்வரலாறுகள் பாண்டியரின் பழம்பெருமையைக் கூறியன.

வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பான்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடும்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!

என்பதின் மூலம் அறியமுடிகிறது.

சேரர் செங்குட்டுவன்

சேரமன்னர்கள் வீரத்திலே சிறந்தவர்கள்; செங்கோல் தவறாமல் அரசாட்சி செய்தவர்கள். அவர்கள் சிறப்பும், செயலும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்றன. பாண்டியன் நெடுஞ்செழியன் நிலையைப் பற்றிச் செங்குட்டுவன் கேட்டான். உடனே மன்னர்களின் நிலையைப் பற்றிய எண்ணமே அவன் நினைவுக்கு வந்தது. அரசர்களின் கடமையைப்பற்றிக் கருதினான். அவன் கருதியதை வெளிப்படையாக உரைத்தான். "பாண்டியனது செங்கோல், ஊழ்வினையால் கொடுங்கோலாக்கப்பட்டது அதனை அவன் விட்ட உயிர் நிமிர்த்து, மீண்டும் செங்கோலாகச் செய்தது. நாட்டிலே மழைவளம் குறைந்தாலும் அரசர்களுக்கு அச்சம்; உயிர்கள் துன்புற்றாலும் அச்சம். குடிகளைக் காத்துக் கொடுங்கோலுக்கு அஞ்சி அரசாளும் குடியிலே பிறப்பதால் துன்பந்தான்; பிறர் பாராட்டும்படியான இன்பம் எதுவும் இல்லை.

வல்பிளை வளைத்த கோலை, மன்னவன்
செலஉயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது.
.............................................................

மன்பதை காக்கும் நடிகுடிப் பிறத்தல்

துன்பம் அல்லது தொழுதகவுஇல் (காட்சி 98-105)

இவ்வடிகள் செங்குட்டுவன் கருத்தை விளக்கின. சேர மன்னர்களின் சிறப்பையும் குறித்தன. "நாடு செழிப்படையவும், குடிகள் இன்புறவும், ஆவன செய்து ஆளுவதே அரசர் கடமை" என்று சேரர்கள் எண்ணினர் இதையே தங்கள் கொள்கையாகக்கொண்டிருந்தனர். இவ்வுண்மையையும் இவ்வடிகளால் அறியலாம். பகைவர்களால் தமது நாட்டுக்கு எத்தகைய இடையூறும் நேரக்கூடாது அவர்களால் தமது குடிமக்கள் துன்பத்திற்கு ஆளாகக்கூடாது பகைவர்களைப் பணியவைத்துக் குடிமக்களைக் காப்பாற்றவேண்டும். இதுவே அரசர்கள் கடமை என்பது சேரமன்னர்களின் சிறந்தக் கொள்கை. பகை அரசர்கள் நடுங்கிப் பணியவைக்காமல், குடிகளை நடுங்கச் செய்கின்ற கொடுங்கோலேன் ஆவேன்" என்று செங்குட்டுவன் உரைக்கின்றான். 'எம்மை இகழ்ந்த வடதிசை மன்னர் முடித்தலையிலே கண்ணடு சிலைக்கான இமயக்கல்லை ஏற்றி வருவேன்; இன்றேல் மேற்கண்ட செயலையுடைய கொடுங்கோல் மன்னன் ஆவேன்" என்று செங்குட்டுவன் உரைத்ததாகத் கால்கோள் காதையிலே காணப்படுகின்றது. இதுவும் சேரமன்னர்களின் சிறப்பைக் காட்டுவதாகும். சேரமன்னர்களின் சிறந்த செயல்கள் சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் பாராட்டப்பட்டிருக்கின்றன.

பல்யானைச் செல்கெழு குட்டுவன்

பதிற்றுப்பத்திலே மூன்றாம்பத்தின் தலைவன் பல்யானைச் செல்கெழு குட்டுவன். அவனைப் பாலைக்கௌதமனார் என்றும் புலவர் பத்துப் பாடல்களால் பாராட்டினார். அப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த குட்டுவன் வேண்டியதைப் பெறுமின்" என்றான் உடனே குட்டுவன், பார்ப்பாரில் பெரியோர்களைக் கேட்டு, அவர்கள் காட்டிய வழிநின்று ஒன்பது பெருவேள்விகளைச் செய்து முடித்தான்.

பத்தாவது வேள்வியைச் செய்து கொண்டிருக்கும்கோது பாலைக்கௌதமனாரும். அவர் மனைவியும் மறைந்தனர். இக்கதை பதிற்றுப்பத்து, மூன்றாம்பத்தின் பதிகத்திலேயே காணப்படுகின்றது.

வண்தமிழ் மறைபோற்கு வான்உறை கொடுத்த

திண்திறள் நெடுவேல் சேரலன் (கட்டுரைக்)

வளம் நிறைந்த தமிழ்ப் புலவராகிய வேதியனுக்கும் சுவர்க்கத்தைக் கொடுத்தவன்; வலிமை பொருந்திய நீண்ட வேற்படையையுடைய சேரன்" என்று சிலப்பதிகாரக் கட்டுரைக் காதையிலே இவ்வரலாறு காணப்படுகின்றது.

## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பவன் ஒரு தீவில் வசித்த பகைவேந்தர் கடல்வழியாகப் படையெடுத்து வந்தனர். இவன் அவர்களுடைய கடற்படையை அழித்தான். அவர்கள் வாழ்ந்தஇருந்க அவர்களுடைய காவல்மரமாகிய கடம்ப மரத்தையும் வெட்டியவன் இந்த நெடுஞ்சேரலாதன் தான். வடநாட்டின் மேல் படையெடுத்துச் சென்றான். அங்கிருந்த மன்னர்களை எல்லாம் வென்றான். இமயத்தின்மேல் வில் முத்திரையீட்டு இவன் தமிழகம் முழுவதையும் ஆட்சி புரிந்தான். யவனர்களை வென்று, அவர்களைப் பிணித்து, அவர்கள் தலையிலே நெய்விளக் கேற்றிவைத்துக் கொணர்ந்தான். அவர்களிடமிருந்த செல்வங்களையேல்லாம் பறித்துத் தன் ஊர்க்குக் கொண்டுவந்தான். இவ்வரலாறு பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் காணப்படுகின்றது. இவனுடைய வரலாறு சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றது.

கடலைக் காவலாக உடைய நாட்டின் காவல் மரமான கடம்பை வெட்டி வீழ்த்தினான், வானோர் அஞ்சும்படி இமயமலையின் மேல் வில்லின் முத்திரையை வைத்தான். இவன் சேரர்குலத் தோன்றல். மாநீர் வேலிக் கடம்புஎறிந்து,

இமயத்து வானவர் மருள், மலையில் பூட்டிய வானவர் தோன்றல்" இவ்வடிகள் காட்டுரைக் காதையிலே காணப்படுகிறான். இவை இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைக் குறிப்பவைகளாகும் கடம்பு முதல் தடிந்த காவலன் என்று இவன், வாழ்த்துக் காதையிலும் குறிக்கப்படுகிறான். இந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். கிரேக்க நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றான். தன்னை எதிர்த்த கடற்படைகளைத் தோற்கடித்தான். கிரேக்கர்களின் செல்வத்தைக் கொள்ளைகொண்டு வந்தான், என்று சிலர் கூறுகின்றனர். பாரதப் போர் நடந்தபோது உதியலாதன் என்னும் சேரமன்னன் தமிழகம் முழுவதையும் ஆண்டான். அவன் பாண்டவர், கௌரவர் ஆகிய இருபுறத்துப் படைகளுக்கும் சோறிட்டான். ஆதலால் அவன் பெருஞ்சோற்று உதியலாதன் என்று பெயர் பெற்றான். இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவன் வரலாறும் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

ஓர்ஐவர், ஈர்ஐம்பதின்மர் உடன்று எழுந்த

போரில் பெரும்சோறு போற்றாது தான் அளித்த

......................................... ஆடாமோ ஊசல்! (வாழ்த்து)

என்று வாழ்த்துக் காதையிலே கூறப்படுகின்றது. இது பெருஞ்சோற்று உதியலாதன் பெருமையை உரைத்தது. இதில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் குறிக்கப்பட்டுள்ளான். சிலப்பதிகார வஞ்சிக் காண்டம் பெரும்பாலும் சேர செங்குட்டுவன் சிறப்பையே கூறிச் செல்கிறது.

முடிவுரை

இவ்வாறாக சிலப்பதிகாரத்தில் மூவேந்தர்களின் புகழ், ஆட்சி சிறப்பு வரலாறு ஆகியவை காப்பியம் முழுவதிலும் பல இடங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இதன் மூலம் தமிழர்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அறிந்துகொள்ள முடிகிறது.